# இலக்கியங்களில் சூழலியல் சிந்தனைகள்

**முனைவர் ஆ.தேவதா**

**உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,**

**புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சி - 2.**

**3**

**ஆய்வுச்சுருக்கம்.**

மனித சமூகத்திற்கும், இயற்கைக்கும் இடையிலேயான உறவை விளக்குவதே சூழலியலாகும். அண்மைக்காலத்தில் உலகெங்கும் பேசப்படும் ஒரு கருத்தாக்கம் சூழலியல். சங்க அகத்திணைப் பாடல்களில் மிக நுட்பமாகச் சூழலியல் கருத்துக்கள் கையாளப்பட்டிருக்கிறது. மரம், செடி, கொடி, விலங்கினங்கள் என அனைத்து நிலைகளிலும் சங்கத்தமிழ் இலக்கியப்புலவர்கள் சூழலியலை முக்கியப்படுத்தி அறிவியல் கண்ணோட்டத்துடன் பாடல்களைப் படைத்திருக்கிறார்கள் என்பது வியக்க வைக்கிறது. மனிதன் தான் வாழும் நிலவியல் எல்லையில் அமைந்திருக்கும் சுற்றுச்சூழலைத் தன்னுடைய சமூக வாழ்க்கையோடு இணைத்துக் கொள்வது மரபு. மனிதனின் வாழ்வியல் ஆதாரம், பாதுகாப்பு போன்றவை இயற்கைச் சூழல்களை மையமாகக் கொண்டு அமைகின்றன.

பண்டைத் தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்தனர். இயற்கையிலிருந்து பிரித்து அறிந்திட இயலாதவாறு சங்கப் பாடல்கள் இயற்கைப் பின்புலத்தில் தோய்ந்து எழுதப்பட்டுள்ளன. சங்கத்தமிழரின் தனித்துவம், சுற்றுச்சூழல் பற்றிய பல்வேறு விழுமியங்கள் இயற்கையை முன்வைத்து சங்கப்பாடல்களில் வெளிப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:** வளி-காற்று,புறவு-காடு,விசும்பு-ஆகாயம், வரை-மலை, புள்-பறவை,ஞாயிறு-சூரியன்

**முன்னுரை**

கலைநயம் தோன்ற ஏதேனும் ஒரு வடிவத்தில் எழுதி வெளிப்படுத்தும் படைப்பு இலக்கியம். இலக்கியத்தில் மனித வாழ்வினோடு தொடர்புடைய இயற்கை உலகும் இடம் பெறுகிறது. மனிதனை நோயற்ற வாழ்வுக்கு நேராகவும், தெளிந்த சிந்தனைக்கு நேராகவும் கரம்பிடித்து அழைத்துக் செல்வது இயற்கையே எனில் மிகையாகாது.

> **"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்**
>
> **காடும் உடையது அரண்" என்கிறது வள்ளுவம்.**

இது இயற்கையின் இன்றியமையாமையை, அது தரும் பாதுகாப்பை நமக்கு உணர்த்தி நிற்கிறது. விரிந்து கிடக்கும் பரப்பாலும், ஓங்கி வளரும் உயரத்தாலும் இயற்கையானது மனிதனை உயர்த்த முனைகின்றது. தன் எழிலால் அவனை மகிழ்விக்க முனைகின்றது.

**சூழலியலும் இலக்கியமும்**

சுற்றுச்சூழலியல் எனும் தொடர் உயிர்வாழ்வினங்களின் சுற்றுப்புறப் பகுதியினைக் குறிப்பதாகும். இவை இயற்கையின் அமைப்பில் உயிர் வாழ்வியலின் சுற்றுப்புறத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. சுற்றச்சூழலியல் என்பது இயற்கையைச் சார்ந்து வாழும் மக்கள், விலங்குகள், தாவரங்கள் ஆகிவற்றையும் அவற்றின் வாழ்வியல் கூறுகளையும் அறிந்து கொள்ளப்பயன்படுகிறது. இவ்வுயிரினங்கள் இயற்கையோடு கொண்டுள்ள உறவுநிலையை அறிந்து கொள்ள துணைநிற்கும் ஓர் அறிவியல் பிரிவாகவும் அமைகின்றது.1

"மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் ஆகியவை தங்களுக்கும் சுற்றுச்சூழலுடனும், கொண்டிருக்கும் தொடர்பைக் குறித்த அறிவியல் துறை சூழலியல்"2 என்பதாகும்.

மனிதனைச்சுற்றி அமைந்துள்ள இயற்கைக் கூறுகள் அனைத்தும் ஏதாவதொரு வகையில் மனித வாழ்வோடு கலந்து செயலாற்றுகின்றது. இவ்வியற்கைக் கூறுகள் அனைத்தும் இல்லாமல் மனிதன் உலகில் நிலைத்து வாழமுடியாது என்பதை உணர்த்துகின்றது.

"நிலம்தீ நீர்வளி விசும்பொடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் "3

என்று தொல்காப்பியம் கூறுகின்றது

"மண் திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித்தலை இய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை"4

என்று பாடிய முரஞ்சியூர் முடிநாகனார் முதற்கொண்டு சங்கப்புலவர்கள் மண்ணின் தன்மை, மலையின் பெருமை, நீரின் அருமை, பறவை விலங்குகளின் செயற்பாடு, தாவரங்களின் பெருக்கம், மக்களுக்கும் சுற்றச்சூழலுக்கும் உள்ள தொடர்பின் விளைவுகள் ஆகியவற்றை இலக்கியக் கருத்துக்களோடு கலந்து கொடுத்துள்ளனர்.

இயற்கையின் பிணைப்புகள் நமது பாரம்பரிய அறிவுமுறைகளுக்கு அறிமுகமில்லாத ஒன்றல்ல, புத்த, சமண, சமய நெறிகள் நம் நாட்டில் செழித்திருந்தபோது சகல உயிரினங்களும் புனிதமானவை எனும் சித்தாந்தம் நிலவியது. காடுதான் ஒரு நாட்டின் நலனுக்கு அடிப்படை என்று வள்ளுவர் கூறுகிறார். நதிகள், மலைச்சிகரங்கள் பூஜிக்கப்படுவது, தலவிருட்ச வழிபாடு, ஆடிப்பதினெட்டு விழா, பசுவைப் போற்றுவது இவைகளில் சுற்றுச்சூழல் பற்றிய நமது மரபுநிலை உறைந்திருப்பது நன்றாகவே தெரிகிறது.

"வானில் பறக்கின்ற புள்ளெல்லாம் நான்
மண்ணில் திரியும் விலங்கெல்லாம் நான்
கானிழல் வளரும் மரமெல்லாம் நான்
காற்றும் புனலும் கடலுமே நான் "5

என்று பாரதியின் கவிதையொன்றில் இந்தச் சித்தாந்தம் அழகாக ளிப்பட்டுள்ளது.

"கடல் இனிது மலை இனிது காடு இனிது
ஆறுகள் இனியன
உலகமும் மரமும் செடியும் கொடியும்
மலரும் காயும் கனியும் இனியன
பறவைகள் இனியன
ஊர்வனவும் நல்லன
விலங்குகளெல்லாம் இனியவை
மனிதர் மிகவும் இனியர்"6

என்று மகாகவி பாரதியார் இயற்கையைப் போற்றி மகிழ்கின்றார். இயற்கையைச் சார்ந்து வாழும் மனிதன் இயற்கையின் வளங்களை நிறைவாகப் பெற்றுக் கொண்டு ஒரு கட்டத்தில் இயற்கைக்கு எதிரான செயல்களில் ஈடுபட்டு அதனை அழிப்பதையும் அதனால் ஏற்படும் சூழல் பாதிப்புகளையும், இலக்கியங்களால் உணர முடிகின்றது.

**சூரிய ஒளி**

சூரிய ஒளி அற்புதனமாது. இந்தச் சூரிய ஒளி காரணமாகத்தான் நுண்ணுயிரிகள் தோன்றின. இவற்றில் நல்லனவும் உண்டு. தீயனவும் உண்டு. தீய நுண்ணுயிரிகள் நோய் தரும். ஆனால் இந்தத் தீய நுண்ணுயிரிகளை அழிக்கக்கூடிய ஆற்றல் சூரிய ஒளிக்கு உண்டு. இந்தச் சூரிய ஒளிபடாத நீர் நிலையில் தீய நுண்ணுயிரிகள் செழித்து வளரும். சூரிய ஒளிபடாத நிழலில் மட்டுமே உள்ள நீர் நிலையிலுள்ள தண்ணீர் உடலுக்குக் கேடு தரும்.

"நிழல் நீரும் இன்னாத இன்னா"7

என்ற திருக்குறளின் மூலம் இக்கருத்தைப் பெறமுடிகிறது. நிழல் குளிர்ச்சி தரக்கூடியது. எனவே அனைவராலும் விரும்பக்கூடியது. நன்மை சேர்க்கக் கூடிய இந்த நிழலும் நீரும் துன்பம் தரக்கூடிய தன்மையைப் பெற்றுவிட்டால் அவை இன்னாதவை. அவை விளக்கப்பட வேண்டியவை என்ற மற்றொரு கருத்தும் இந்தக் குறளில் உள்ளது.

இலக்கிய நயத்திலும் சுவையிலும் முதன்மை பெற்று விளங்குகின்ற ஓர் அருந்தமிழ்க் காப்பியம் சிலப்பதிகாரம். இதில் இளங்கோவடிகள் முதல் காதையாகிய மங்கல வாழ்த்துக் காதையில் "ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்" என்று ஆரம்பித்திருப்பது ஞாயிரும் திங்களும் உலகுக்கு ஒளிகொடுப்பன. மாமழையானது உலகனைத்திற்கும் உயிர் கொடுப்பன. அதனாலேயே இளங்கோவடிகள் திங்கள், ஞாயிறு, மாமழை போன்ற இயற்கைப் பொருட்களைப் போற்றிப் பாடியிருக்கிறார்.

"செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்
வளி திரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமும் என்றிவை
சென்றளந்து அறிந்தோர் போல என்றும்" (புறம் - 30)

என்ற புறநானூற்றுப் பாடல் சூரியன் செல்லும் வழியும், அச்சூரியனது இயக்கமும், சூரிய இயக்கத்தால் சூழப்பட்ட நிலமண்டிலமும், காற்றியங்கும் திசையும், ஓர் பிடிப்புமின்றி அந்தரத்திலே நிற்கும் ஆகாயமும் என்றிவை எல்லாம் சென்று, அவற்றின் இயல்பை அறிந்;துணர்ந்து இவை இவை இத்தன்மை உடையன என்று கூறுமளவுக்கு அறிவியல் உணர்வுடையோர் பலபேர் இருக்கின்றனர் என்று கூறுகிறது.

**காடு**

ஒரு காலத்தில் இந்தியா வனங்களின் தேசம். பெரும் வனங்களுக்கிடையே மக்கள் வசித்தனர். இன்று மக்கள் கூட்டம் வாழுகின்ற நிலத்தில் ஆங்காங்கே வனங்கள் இருக்கின்றன. முன்பு காடுவெட்டி, குளம் திருத்தி, வயல் அமைத்துத் தருவது அரசனின் கடமையாக இருந்தது. காடுகள் எல்லையற்றவை. தானே அளவில்லாது வளர்ந்து விடும். எனவே அழிப்பதால் ஒன்றும் ஆகிவிடாது என்ற நிலைமையிருந்தது. ஆனால் தொழில்புரட்சியும், ஆங்கிலேயரின் கொள்ளையும், எப்படியாவது வளர்ச்சி என்ற உள்ளூர் ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளும், பொறுப்பற்ற மக்களின் செயல்களும் காட்டை அழித்தன.

ஒரு நாட்டில் மழையும் ஆரோக்கியமான காற்றும் வாழ்விற்கு உகந்த சுற்றுச் சூழலும் நிலவ நாட்டில் மூன்றில் ஒரு பகுதி வனமாக இருக்க வேண்டியது அவசியம். வனங்களில் நிறைந்திருப்பது மரங்கள். மரங்கள் உயிருள்ளவை. உயிரின் அலைகளை வெளியிடுபவை. பிராணக் காற்றைத் தருபவை. உயிர்களோடு நேசம் கொண்டாடுபவை. ஆதிமனிதரைப் படைத்த கடவுள் ஏதேன் என்ற சிங்கார வனத்திலே மகிழ்வாக வாழவிட்டார் என்று திருவிவிலியம் குறிப்பிடுகிறது. புத்தர் மரத்தடியில் ஞானம் பெற்றவர் என்பதும் நாம் அறிந்ததே. இந்தியாவின் ஞானநூல்கள் பெரும்பான்மையானவை வனத்தின் நடுவே வனத்தூண்டுதல்களினால் உருவானவை. காடுகளே நதிகளின் தாய். காடும் நதியும் சொல்லிய வழியிலே மானுட நாகரிகம் எழுந்தது. கலை, இலக்கியம், பண்பாடு எல்லாம் இயற்கையைப் பார்த்து மானுடம் அமைத்துக் கொண்ட உணர்வின் வெளிப்பாடு.

மனிதன் தனது தன்னலப்போக்கால் இயற்கையை அழித்துத் தன் தேவைக்கேற்ப மாற்றி அமைப்பதை இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. அதனால் ஏற்படும் அழிவுகளையும் விளக்குகின்றன. மனிதன் காட்டை அழித்து நாடாக மாற்றியதை,

"காடுகொன்று நாடு ஆக்கி" (பட்டினப்பாலை. பா.வ.283)

என்று பட்டினப்பாலையும்

"உறுசெறுநர் புலம்புக்கு அவர்
கடிகாவின் நிலை தொலைச்சி
இழிவு அறியாப் பெருந்தண்பணை
குரூஉக் கொடிய எரிமேய
நாடெனும்பேர் காடாக" (மதுரைக்காஞ்சி, பா.வ. 152-156)

என்று பகைமை காரணத்தால் பகைவரின் மருதநிலங்களை அழித்துப் பாழாக்கியதை மதுரைக்காஞ்சியும் எடுத்துக்காட்டுகின்றன.

முல்லைப்பாட்டில் வளமான முல்லை நிலமாகிய காடு அழிக்கப்பட்டு வஞ்சிப்போருக்கான பாசறை அமைக்கப்படுகிறது. போர் மேற்சென்ற அரசர்கள் காட்டை அழித்து, வேடுவரின் அரண்களை அழித்து பாசறை அமைக்கும் பழக்கம் இருந்ததை முல்லைப்பாட்டால் அறியமுடிகிறது. அதிகார வர்க்கம் காட்டை அழித்து ஆக்ரமிக்கும் போக்கை முல்லைப்பாட்டால் உணர முடிகின்றது.

"கான்யாறு தழீஇய அகனெடும் புறவில்
சேணாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி
வேட்டுப் புழை அருப்ப மாட்டிக் காட்ட
இடுமுள் புரிசையின் ஏமுற வளைஇப்
படுநீர்ப் புணரியின் பரந்த பாடி" (மு.பா. 24-28)

எனும் வரிகள் காடழித்துப் பாசறை அமைப்பதைக் குறிக்கின்றது.

பாரியின் பறம்பு மலையைச் சிறப்பிக்க வந்த கபிலர்,

"குறத்தி மாட்டிய வறல்கடைக் கொள்ளி
ஆரம் ஆதலின் அம்புகை அயலது
சாரல் வேங்கை பூஞ்சினைத் தவழும் " (புறம் - 108:1-3)

என்று வரும் பாடலடிகளால் சந்தனமரம் எரிக்கப்பட்டமையையும் அதனால் எழுந்த புகை வேங்கை மரத்தில் படிதலையும் குறிக்கின்றார். அன்றாடத் தேவைகளுக்கு அரிய வகை சந்தன மரங்கள் அழிக்கப்பட்ட நிலையினைக் குறிப்பால் உணர்கின்றோம்.

சங்ககால வள்ளலாகிய பாரிமன்னன், பறம்புமலையிலுள்ள சந்தன மரங்களை வெட்டி எடுத்துக் கொண்டு இதற்கு விலையாக பொன், பொருள், பெண் தருவதாகச் சொன்ன யவன வணிகர்க்குப் பதில் சொல்லுகிறான். மரங்கள் தோறும் கனிகளைக் கொய்யலாம். மலர்களைப் பறிக்கலாம். ஆனால் மரங்களை வெட்டிச் சாய்க்க முடியாது. இன்று விஞ்ஞானம், தொழில்வளர்ச்சி, முதலாளித்துவம் என்ற பெயரில் இயற்கையை அழித்துவிடக் கூடாது என்று அன்றே சொல்லியிருக்கிறான் பாரிவேந்தன்.

சோழன் பெருநற்கிள்ளி தன் பகைநாட்டு அரண்மனைகளில் வளர்க்கப்பட்ட மரங்களை விறகுகளாகப் பயன்படுத்தினான். என்பதை,

"விளைவயல் கவர்பூட்டி மனை மரம் விறகு ஆகி" (புறம் - 16)

என்ற வரிகள் எடுத்துக்காட்டுகின்றன.

சோழன் கிள்ளிவளவன் சேரநாட்டுப் படையெடுப்பின் போது காவல் மரங்களை முற்றிலும் அழித்த செய்தியினை

"நெடுங்கை நவியம் பாய்தலின் நிலையழிந்து
வீகமழ் நெடுஞ்சினை புலம்பக் காவுதோறும்
கடிமரம் தடியும் ஓசையும் தன்னுள்
நெடுமதி வரைப்பின் கடிமனை இயம்ப" (புறம் : 36)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

"யூப்ரடீஸ், டைகிரீஸ் நதிக்கரையில் உள்ள மெசபடோமியா நாகரிகம் அழிவைச்

சந்தித்தது. யூப்ரடீஸ், டைகிறீஸ் நதிகளின்; கரையிலுள்ள காடுகளை அழிக்கவும், நதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் சமயத்தில், பெரும் காட்டு மண்ணை நதிகள் சுமந்துவர அங்கு உண்டாக்கியிருந்த ஏராளமான வாய்க்கால்களை அடைத்தது. இது வேளாண்மையைப் பாதித்தது. படையெடுத்து வந்த மங்கோலியர்கள் மீதமிருந்த பாசன அமைப்புக்களைத் தகர்த்தனர். அத்தோடு அந்த நாகரிகம் தன் இயல்பை இழந்தது.

மனிதன் காட்டைத் தனக்கு மட்டுமே சொந்தமென்று எண்ணி தனது தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொண்டதையும் பிறகு அதனை அழிப்பதையும், சூழல் மாசுபாட்டையும் இலக்கியங்கள் தெளிவாகக் கூறுகின்றன. இயற்கையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வாழ வழியுணர்ந்த மனிதர்கள் அதற்கான வரையறைகளையும் கண்டு கடைப்பிடிக்க வேண்டும். மனிதகுலம் தனது அறியாமையாலோ அல்லது பேராசையாலோ எல்லைகளைத் தாண்டி இயற்கையின் இயல்புகளுக்கு எதிராகச் செயல்படுகிறபோது சுற்றுக்சூழல் மாசுபட்டு துன்பங்களை அனுபவிக்க வேண்டிய நிலைக்கு மனிதர்களும் தள்ளப்படும் நிலை ஏற்படுகிறது.

**காற்று**

பழந்தமிழரிடையே காற்று மாசுபாடு இருந்தமையைப் பட்டினப்பாலை எடுத்துரைக்கின்றது. காற்று மாசுபாடு அதன்; இயற்பியல், இரசாயன அல்லது உயிரியல் பண்புகளை மாற்றுவதன் மூலம் காற்றின் தரத்தை மாற்றுகிறது. சுற்றுச்சூழலில் பல மாசுபாடுகள் இருப்பதால் காற்றின் வேதியியல் மட்டத்தில் செறிவு மாறுகிறது. இதனால் காற்றின் தரம் படிப்படியாகக் குறைகிறது.

"கார்க் கரும்பின் கமழ் ஆலைத்
தீத்தெறுவின் கவின்வாடி
நீர்ச்செறுவின் நீள் நெய்தல்
கோள் தெங்கின் குலைவாழைக்
காய்க்கமுகின் கமழ் மஞ்சள்
இனமாவின் இனர்ப்பெண்ணை
முதற்சேம்பின் இளைஇஞ்சி" (பட்டினப்பாலை 9:19)

முதிர்ந்த கரும்பின் மணமுள்ள பாகைக் காயச்சுவதால் ஆலைகளில் ஏற்படும் நெருப்பின் புகை வயல்களில் உள்ள நீண்ட நெய்தல் மலர்களை வாட வைத்துவிடும். அருகில் உள்ள மருதநிலத்து மரங்களான தென்னை, வாழை, பாக்கு, பனைமரங்கள் போன்றவை புகைகளையும், தூசுகளையும் தடுத்து நிறுத்தப் பயன்பட்டன. மரங்கள் காற்றில் கலந்து வருகின்ற மாசுக்களை தன் இலைகளால் தடுத்தன.

**நீர்**

போர் காரணமாக எதிரி நாட்டு மன்னனின் நீர்நிலைகள் பாழ்படுத்தப்படுவது போர் நடைமுறைகளில் ஒன்றாகக் கருதப்பட்டு உள்ளது.

"ஒளிறு மருப்பின் களிறு அலர
காப்புடைய கயம் படியினை" (புறம் 15:9-10)

என்றும்

"கடிதுறை நீர்க்களிறு படீஇ " (புறம் 76:6)

என்றும் கூறப்படுகின்றவற்றால் எதிரிகளின் நீர்நிலைகள் யானைகள் கொண்டு மாசு படுத்தப்பட்ட செய்தி பெறப்படுகிறது.
இதனையே ஐங்குறுநூறும்

"…. நம் படப்பைத்
தேன் மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு
உவலைக் கூவற் கீழ்
மானுண்டு எஞ்சிய கலுழி நீரே" (ஐங்குறுநூறு - 203)

என்று கூறுகின்றது. திருமணமாகிப் புகுந்த இடம் சென்ற தலைவி மான் போன்ற விலங்குகள் கலக்கிய இலைகள் நிறைந்த கலங்கிய நீரைப் பருகுவதாகக் கூறுகிறாள்.

**முடிவுரை**

பஞ்சபூதங்களின் தன்மையும், அனைத்து உயிரினங்களின் செயல்பாடுகளும், தாவரங்களின் வளர்ச்சியும் முறைப்பட நிகழ்ந்தால்தான் மனிதகுலம் வாழ்வாங்கு வாழமுடியும். இயற்கையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வாழ வழியுணர்ந்த மனிதர்கள் அதற்கான வரையறைகளையும் கண்டு கடைப்பிடிக்க வேண்டும். மனிதகுலம் தனது அறியாமையாலோ அல்லது பேராசையாலோ எல்லைகளைத் தாண்டி இயற்கையின் இயல்புகளுக்கு எதிராகச் செயல்படுகிறபோது சுற்றுக்சூழல் மாசுபட்டு துன்பங்களை அனுபவிக்க வேண்டிய நிலைக்கு மனிதர்களும் தள்ளப்படும் நிலை ஏற்படுகிறது.

மனிதனின் அடிப்படைத் தேவைகளாகிய உண்ணும் உணவும், பருகும் நீரும், உடுத்தும் உடையும், இருக்கும் இடமும் சரியாக அமையவில்லையெனில் துன்பமே மிகும். சுற்றுச்சூழலோடு கொண்டு கொடுத்து வாழும் விதத்தை இயல்புகளைப் புரிந்து செயல்பட்டால் மனிதத் தேவைகளும் நிறைவேறும். இயற்கையின் தேவைகளும் நிறைவேறும்.

"அருளொடும் அன்பொடும் வாராப் பொருள்ஆணிக்கம்
புல்லார் புரள விடல் "8

அருளும் அன்பும் இல்லாத பொருளால் எப்பயனும் இல்லை. அதைத் தவிர்த்தல் வேண்டும் என்பதே இதன் பொருள். நாம் செய்யும் செயலால் விளையும் பலன்கள் உலக உயிர்களின் வாழ்வில் நலன் பயப்பதாக, நம்மைச் சுற்றி வாழும் உயிர்களுக்கும், சுற்றுச்சூலுக்கும் இனக்கமானதாய் இருக்க வேண்டும்.

**சான்றெண் விளக்கம்**

1. இரா.மோகன் ரூ மு. மணிவேல் (ப.ஆ)., இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், ஆய்வுக்கோவை - 3, ப:1818
2. கிரியாவின் தந்காலத் தமிழ் அகராதி - ப.621
3. பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை, (ப.ஆ)., தொல்காப்பியம் பொருளதிகாரம் - இளம்பூரணம், நூ.எண்.-635
4. ஞா.மாணிக்கவாசகன், (உ.ஆ)., புறநானூறு, பா.எ. - 2
5. தமிழவேள் ச.மெய்யப்பன் (ப.ஆ)., பாரதியார் கவிதைகள், ப.128

6. மேலது, ப. 453
7. டாக்டர் மு.வரதராசனார் (உ.ஆ), திருக்குறள், கு.எண்.-881
8. மேலது. கு.எண்.-755